# ஆர். வெங்கட்ராமன் இந்திய குடியரசுத் தலைவராக தெரிவு

விலை ரூபா 1-50

**ஈழநாடு**

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 1 துல்ஹஜ்ஜா 20 இதழ் 146

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-7-1987

(புதுடில்லி)

இந்தியக் குடியரசின் தலைவராக திரு. ஆர். வெங்கட்ராமன் (கா. இ) பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திரு ஆர். வெங்கட்ராமனை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர் முன்னள் நீதிபதி திரு வீ. ஆர். கிருஷ்ணய்யரை 458 598 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளார்.

இந்தியக் குடியரசின் 8வது குடியரசு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு இந்திய மாநிலங்கள் இருபத்தைந்தில் பதினேழு மாநிலங்கள் பெரும்பான்மை ஆதரவை அளித்துள்ளன. எதிர்கட்சி வேட்பாளர் திரு வீ. ஆர். கிருஷ்ணய்யருக்கு எட்டு மாநிலங்கள் பெரும்பான்மை ஆதரவை அளித்துள்ளன.



குடியரசுத் தலைவர் தேர்தல் வாக்குகள் நேற்று ஆறரை மணித்தியாலங்களாக எண்ணப்பட்டு மாலை ஆ மணிக்கு முடிவுகள் தேர்தல் அதிகாரியால் அறிவிக்கப்பட்டது.

எட்டாவது குடியரசுத் தலைவராக திரு ஆர். வெங்கட்ராமன் இம்மாதம் 25ம் திகதி

(5-ம் பக்கம் பார்க்க)

● பிரதமர், எம். பி.க்களின் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும்

# 5வது இந்திய உணவுக் கப்பல் இன்று காங்கேசன் வருகிறது

## இந்திய தூதரக உயர் அதிகாரிகளும் யாழ். வருவர்

(அலுவலக நிருபர்)

**இந்திய நிவாரணப் பொருள்களை காங்கேசன்துறைக்கு நேரடியாக அனுப்பாது கொழும்புக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்தே யாழ்ப்பாணம் அனுப்பப்படவேண்டுமென பிரதமர் பிரேமதாஸாவும், சில எம்.பிக்களும் கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபித்த போதிலும், ஐந்தாவது இந்தியக் கப்பலான எம். வி. நிக்கோரேட் இன்று உணவுப் பொருள்களுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.**

இக்கப்பல் இங்கு வரும் சமயம் கொழும்பிலுள்ள இந்திய தூதரக முக்கிய அதிகாரிகள் சிலரும் விமான மூலம் யாழ்ப்பாணம்வருவார்களென தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

சுமார் 1000 தொன் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்னையிலிருந்து காங்கேசன் துறை இராணுவ துறை முகத்தை நோக்கி நேற்றுக் காலை 9 20க்கு புறப்பட்ட இக் கப்பலில், இந்திய உணவுக் கூட்டுத்தாபன தமிழக உயர் அதிகாரி கே. எல். ராவும் வருகிறார்.

[5ம் பக்கம் பார்க்க]

## தவறுக்கு வருந்துகிறோம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வீமன்காமம் பாடசாலை அதிபர் முத்தையா சிவராசாவின் மரண விசாரணை சம்பந்தமாக இம் மாதம் 8ம் திகதி ஈழநாடு 8ம் பக்கத்தில் வந்த செய்தியில் அவ் விசாரணை தீர்ப்பு தொடர்பாக சில தவறுகள் ஏற்பட்டதை யிட்டு வருந்துகின்றோம். அத்தவறுக்காக மன்றிடம் மன்னிப்புக்கோருகின்றோம்.

[5ம் பச்கம் பார்க்க]

## இந்திய நிவாரண கப்பல்கள் ஆகஸ்ட் 4 வரை யாழ்ப்பாணம் வர அனுமதி

(கொழும்பு)

இந்திய உணவுப் பொருள்கள் காங்கேசன்துறை துறை முகத்திற்கு வருவதற்கான கால வரம்பை அடுத்த மாதம் ஆகஸ்ட் 4ம் திகதி வரை இலங்கை அரசு நீடித்துள்ளது

காங்கேசன்துறையில் உணவுப் பொருட்கள் இறக்குவதில்

[8ம் பக்கம் பார்க்க]

## ஜயவர்த்தன பல்கலைக்கழக 2ம் தவணை விரிவுரைகள் 20ல் ஆரம்பம்

[கொழும்பு]

கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைககழக 2ம்தவணைக்கான விரிவுரைகள் 20ம் திகதிஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலை, பிரயோக விஞ்ஞானம், முகாமைத்துவ, கல்வி, வர்த்தகம் ஆகிய பீடங்களின் 3ம்

(5ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை, நெல்லியடி மக்களுக்கு நிவாரண உதவி வழங்க ஏற்பாடு

(அலுவலக நிருபர்)

இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியில் உள்ள நெல்லியடி பருத்தித்துறைப் பகுதியில் உள்ள மக்களுக்கு நிவாரண உதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் சென்ற உயர்குழுவே இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைளினல் பாதிப்புக்குள்ளாகியிருக்கும், வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதிகளை அரச அதிபர் தலைமையில் சென்ற உயர் குழுவொன்று நேற்று நேரில்சென்று பார்வையிட்ட பின்பே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் சென்ற இக்குழுவில் இந்திய இலங்கை, யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் யாழ். செயலக உயரதிகாரிகள் ஆகியோர் சென்றி

(5ம் பக்கம் பார்க்க)

## இயக்கப்பாணியில் கடத்தல், புலிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

இயக்கப்பாணியில் நடவடிக்கையில் ஈடுபட்ட சிலநபர்களால் திருநெல்வேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் கடத்தி செல்லப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளால் அந் நபர் மீட்கப்பட்டுள்ளதுடன்; கடத்தலுக்குப் பாவிக்கப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இது போன்ற நடவடிக்கையில் ஈடுபடுவோர்கள்கடுமையானதண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது (ரா)

## இடம்பெயர்ந்த வடமராட்சி தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் இக்கட்டான நிலை

(நமது நிருபர்)

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்கள் ஜி ஸி ஈ. (உயர்தர வகுப்பு) சோதனை எடுப்பதற்கு மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அதே பகுதியில்தான் பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவாம்.

### பெற்ரோர் கவலை

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அவர்களின் பெற்ரோரும் இதுபற்றி பெரிதும் கலக்கமடைந்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியிலிருந்து பெரும்பகுதி மக்களும் வெளியேறிவிட்ட நிலையில், பரீட்சார்த்திகளுக்குரிய அனு

(5-ம் பககம் பார்க்க)

## கம்பன் விழா இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,வெள்ளி

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் கம்பன் விழா இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இன்றும் நாளை சனிக்கிழமை மாலை நேரங்களில் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்திலும் இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமை காலையும் மாலையும் நாவலர் கலாசார மண்டபத்திலும் கம்பன் விழா நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## கோவையில் — தமிழர் கொலையைகண்டித்து மண்டையோட்டு ஊர்வலம்

(சென்னை)

இலங்கையில் இடம்பெறும் தமிழர் படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிப்பதற்காக கோவையில் கடந்த மாதம் மண்டையோட்டு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது

சுமார் 1000 பேர் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலத்தின் முன்னல் இருவர் கறுப்புக்கொடி பிடித்துக் கொண்டு நடக்க, பின்னல் வந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மண்டையோட்டைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு "காப்போம், காப்போம் தமிழரைக்காப்போம்" "வேண்டும், வேண்டும் தமிழீழம் வேண்டும்" என்றகோஷங்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன் [கன்னு திட்டிக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். ஏ-1904

பாவித்தவீட்டுத் தளபாடங்கள், கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், Floor Polisher, எலற்றிக் கேற்றல், Guitar [கிற்ரார்], R. X 60 National கசற் றேடியோ, Formica சாப்பாட்டுமேசை Office மேசை, Meat Safe, மேசைகள், Vono Spring Beds மற்றும் பலஉடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9837

முற்றிலும் கண்ணாடியினால் செய்யப்பட்ட மீன் வளர்ப்பு தொட்டிகள், தொட்டிகளை அழகுபடுத்தும் பிளாஸ்டிக் உபகரணங்கள்;- ஒரு Three in-one set இரண்டு ஸ்பீக்கர்களுடன் ஒரு Fan னும் விற்பனைக்குண்டு. 131 அரசடி வீதி, கந்தர்மடம். சி-9852

''சன்யோ'' ஸ்பீக்கர் 2, ரேடியோரோன் 15Wஸ்பீக்கர் 2, மின்சார நீர் இறைக்கும் யந்திரம் ½'' கோம் மேட், கெல்மெட் யப்பான்உற்பத்தி, அன்ரினா ரொட்டா, றோயல் ஆங்கில தட்டச்சு தொடர்பு: ரெலிவோய்ஸ் என் ஜினீயேர்ஸ், 184A, நாவலர் றோட், யாழ்ப்பாணம் சி-9871

பிரம்பு ஹோல் செற், பலவித கட்டில்கள் கதிரைகள், மேசைகள், தொட்டில்கள், Cot, Screen, Cabinet, Easy-chair, Ice cream beater, Electric Cooker with oven, Ceiling/Table Fan, Cigmapump, Typewriter மற்றும் பலபொருள்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9874

### 8-வது ஆண்டு நினைவஞ்சலி



**S. P. குருசாமி**

[இன்ஸ்பெக்டர் பொலிஸ் இலாகா]

தோற்றம்: 15-11-1922
மறைவு: 01-07-1979
திதி: 17-07-1987

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு ஒருபோதும் மறையாது. ஆத்மா சந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர், மனைவி, மகள், பேரப்பிள்ளைகள்: ரமேஸ், பிரகாஸ், ஆகாஸ், பிரதீஸ், சபேஸ்.

204, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
சி-9853

## விற்பனைக்கு

Odio Tecnics டெக், Sunsuki அம்லி(F)பயர், ஸ்பீக்கர் பொக்ஸ், இசைத்தட்டுக்கள், கசற்நாடாக்கள், Asia சைக்கிள், றெக்கோடிங் சம்பந்தமான மேலும் சிலபொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: [சிங்கம்] பைனியர் றெக்கோடிங்பார், பெற்ரூர் வேக்ஸ், ஆஸ்பத்திரி பின்வீதி, மானிப்பாய். சி-9862

26ம் திகதி நடைபெறும் புலமைப்பரிசிற் பரீட்சை ஆண்டு 6 விசேட சித்திக்கான பயிற்சி நூல்கள் விற்பனையாகின்றது. பொற்பபிரதிகளே கைவசம் உண்டு. உடன்பெற்று பயில்வதன் மூலம் திறமைச் சித்திக்கு உத்தரவாதம் பெறுங்கள். புதியகணிதப்பயிற்சி ஆண்டு 6, புதிய தமிழ மொழிப்பயிற்சி ஆண்டு 6. விற்பனையாளர்: ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். சி-9859

### தவறிவிட்டது

10-07-87ல் சைக்கிளில்வரும் போது இணுவிலுக்கும் மருதனுமடத்துக்கும் இடையில் எனது அடையாள அட்டை தவறிவிட்டது. எடுத்தவர்கள் நாகரத்தினம் பூபாலசிங்கம், சைவப்பிரகாச மகாவித்தியாலயம், இணுவில் என்ற முகவரியில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். சி-9863

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதி மன்றில்.

மரண சாதன நியாயதிக்கம்
இல-ரி/305

கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற குழந்தை வேலு நாகப்பர் கைம்பெண் பொன்னுச்சி என்பவரின் மரணசாதனம் எழுதப்பட்ட மரணச் சொத்துக்கள் விடயத்தில்

மரணமெய்தியவர்.

1. வித்தியானந்தன் பெண் சிவஞானசக்தி, செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னுகம்.

மனுதார்.

எதிராக

1. கார்த்திகேசு திருஞானசம்பந்தமூர்த்தி, காடிவளை, இளவாலை.
2. வைத்தியநாதர் வித்தியானந்தன், செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னுகம்.

எதிர் மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1987ம் ஆண்டு ஆவணி 5ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1987-ம் ஆண்டு ஆடி மாதம் 15-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

நீதிமன்ற ஆணைப்படி
வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளருக்காக

வரைவு
**எஸ். பி. சிவஞானம்,**
மனுதாரின் சட்டத்தரணி
[எ-1928]

## கல்வி

இந்தியாவில் அரசாங்க தொழில் நுட்பக் கல்லூரிகளில் அனுமதிபெற விரும்பும் மாணவ / மாணவிகள் 18-ம் திகதிக்குமுன் எம்முடன் தொடர்புகொள்ளவும். உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை உண்டு தகைமை: G C E (O/L). 1-7-87 அன்றுள்ளபடி 20 வயதுக்குக் குறைவாக இருக்கவேண்டும். 'ஹரிஹரன் என்ரபிறைஸ்' 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி 9842)

### பயிற்சிகள்

Computer Programming ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பியறிங் வயறிங், வைண்டிங் பயிற்சிகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும் ஆரம்பம் 20-07-1987. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, [றெயில்வே கடவையருகாமை] யாழ்ப்பாணம். சி-9870

### கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன் கேள்வி விண்ணப்பம் வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்திலுள்ள வெற்றுச்சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு விண்ணப்ப வைப்புப்பணம் ரூபா 110/- (ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்) செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலம் ''பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என்ற முகவரிக்கு 05-08-87ந்திகதிக்கு முன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்விண்ணப்ப விபரத்தினை எழுதி, அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.
[ஏ 1927]

### ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. முதலித்தம்பி செலலத்துரை**

தோற்றம்: 04-10-1920
மறைவு: 28-07-1986
திதி:17-07-1987

ஆண்டு ஒன்று கழிந்தாதாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் என்றும் நிலைத்துநிற்கும். தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

53, நாவலடி லேன், வண்ணார்பண்ணை-மேற்கு, யாழ்ப்பாணம்.
சி-9861

## சத்தியக்கூற்று மூலம் சேதவிபரங்கள்

[மாவிட்டபுரம் நிருபர்]

மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் சேத விபரங்கள் பற்றி சத்தியக்கூற்று மூலம் விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

வலி. வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றிய தெல்லிப்பழை அலுவலகத்தில் தினமும் ஏராளமான பொதுமக்கள் கூடி தமது சத்தியக் கூற்றுக்களைச் சமர்ப்பித்து வருகிறார்கள்.

கடந்த 7ம் திகதிக்குப்பின் வலி. வடக்குப் பகுதியில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

ஏனையோர் தமது வீடுகள், உடமைகள், தொழில் நிலையங்கள் விவசாய முயற்சிகள் பற்றிய இழப்பீடுகளைக் குறிக்கும் சத்தியக் கூற்றுகளை சமர்ப்பித்து வருகிறார்கள்.

வலி. வடக்குப் பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்கள் குறித்து முழுமையான அறிக்கையொன்றை தயாரிக்கவும் தாம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் தெரிவித்தார்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை———

## பயிற்சி வகுப்புகள் 25-ம்,26-ம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், புதிய மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புகளை இம்மாதம் 25-ம், 26-ம் திகதிகளில், யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடாத்தவிருக்கிறது.

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால், அடுத்த மாதம் 23-ம் திகதி இலங்கையின் சகல மாவட்டங்களிலும் 3-ம் தர மத்தியஸ்தர் பரீட்சை நடைபெறவிருப்பதின் நிமித்தமே மேற்படி பயிற்சி வகுப்புகள் நடைபெறவிருப்பதாக, யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் திரு. ஈ கே. குமரையா தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 25-ம், 26-ம் திகதிகளில், யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகளை பிரசித்திபெற்ற மத்தியஸ்தர்கள் நடாத்தவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. மேற்படி பயிற்சி வகுப்புகளுக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் உப-காரியதரிசி திரு டி. ஏ. எம். குணசிங்கம் செய்துள்ளார்.

கடந்த வருடம் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சார்த்த பரீட்சையில் சித்திபெற்ற 75 பரீட்சாத்திகள் மட்டுமே, மேற்படி பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதி உடையவர்களாக கணிக்கப்படுவார்கள், என இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (வி)

### லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் இஸ்சூஸ் காப் மொடல் (6 டொன் நிறை) லொறி ஒன்றிற்கு வெட்டி பொடி அடிப்பதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும், ''தலைவர், கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்கம், பரந்தன்.'' என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''லொறி பொடி அடித்தல்'' என எழுதப்பட்டு 05-08-1987 நண்பகல் 12மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

ஒப்பம்
**தலைவர்.**

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.
15-07-1987. [ஏ 1926]

### ஷெல் தாக்கி காயம்

யாழ்ப்பாணம்,வியா.

வல்வெட்டித்துறை வேவில் பிள்ளையார் கோவிலில் கடந்த ஞாயிறு இடம் பெற்ற ஷெல் தாக்குதலின் போது படுகாயமடைந்தவர்களில் ஒருவரான கந்தையா சின்னத்தம்பி (வயது 72 ) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


**எமது நேற்றைய புதிய வெளியீடுகள்**

M. N. நம்பியார் ★ சசிகலா ★ பிரபாகர்
**''தங்கமாமா''**
முத்துராமன் ★ ஜெயலலிதா சோ
**''சூரிய காந்தி''**

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665. [ஏ 1929

**MEDICAL LABORATORY TECHNOLOGIST**

Closing date for application Bio Data and Curriculum Vitae extended till 15.8.1987 as requested by out station candidates.

DIRECTOR,

Maternity and Nursing Home,
Market Square, Chankanai.
[ஏ 1917]

# லெபனுனில் கார் குண்டு வெடிப்பு:

# 42 பேர் பலி; 200 பேர் காயம்

## இஸ்ரேல் தொடர்பென குற்றச்சாட்டு

**பெய்ரூட், ஜூலை 16**

**லெபனுனின் முக்கிய இருநகரங்களில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சக்திவாய்ந்த கார்குண்டு வெடிப்பில் 42 பேர் கொல்லப்பட்டனர்; 200க்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனர். வீடுகள், கட்டிடங்கள் பல தீப்பற்றிக் கொண்டன.**

திரிப்பொலி நகரில் சனநடமாட்டம் கூடிய சந்தைப்பகுதியில் இடம்பெற்ற முதலாவது குண்டுவெடிப்பில் 40 பேர் பலியானுர்கள். அதேநேரம் பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் பலியானுர்கள். இரு சம்பவத்திலும் 200க்கும் அதிகமானேர் படுகாயமடைந்தனர். வீடுகள், கட்டிடங்கள் தீப்பற்றிக் கொண்டன.

நெருக்கடியான இச்சந்தைப் பகுதியல் நிறுத்தப்பட்டிருந்த காரொன்றினுள் அடையாளம் தெரியாத சிலரே இக்குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய ஆதரவுபெற்ற பிரிவினரே இதற்கு காரணமென லெபனுன் வானெலி அறிவித்துள்ளது எனினும் இதுவரை எந்தவொரு குழுவும் இதற்கான பொறுப்பை ஏற்கவில்லை.

கடந்த ஒரு மாதத்திற்கு முன் லெபனுன் பிரதமர் ஜனுப் ரஷீத் கராமே ஹெலிகொப்டரில் மறைத்துவைக்கப்பட்ட குண்டுவெடித்ததில் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [சி]

வளைகுடாவில்———

## "வல்லரசு நடமாட்டத்திற்கு குவைத் பொறுப்பல்ல"

-துணைப்பிரதமர் கூறுகிறுர்

குவைத், ஜூலை 16

வளைகுடா பகுதியில் வல்லரசு நடமாட்டத்திற்கு தான் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என குவைத் கூறியுள்ளது. இத்தகவலை குவைத் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான ஷேக் ஸபா அல் அகமட் தெரிவித்துள்ளார்.

வளைகுடாவில் செல்லும் குவைத் கப்பல்களுக்கு அமெரிக்க கொடிகள் ஏற்றப்பட்டு ஆகாய கடல்மார்க்க பாதுகாப்பு வழங்க அமெரிக்கா முடிவுசெய்துள்ள இவ்வேளையில் குவைத் துணைப்பிரதமரின் இச்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அமெரிக்க கொடி பறக்கவிடப்பட்ட பதினெரு குவைத் கப்பல்களில் முதல் கப்பல் அடுத்த திங்கட்கிழமை இப்பகுதியில் தனதுபயணத்தை ஆரம்பிக்கவுள்ளது. இதன் பாதுகாப்பு அமெரிக்காவிடமே தங்கியுள்ளதும் தெரிந்ததே.

வளைகுடாவில் ஈரான்-ஈராக் யுத்தத்தைத் தொடர்ந்து இதில்செல்லும் கப்பல்கள் தாக்கப்படுவது தொடர்ந்து நடைபெற்றது. குறிப்பாக ஈராக்கின் நெருங்கிய ஆதரவான குவைத் கப்பல்கள் தாக்கப்பட்டன இதனை காரணம் காட்டி அமெரிக்க சோவியத் நடமாட்டம் இப்பகுதியில் கடந்த ஒருமாத காலமாக அதிகரித்துள்ளது.

இதனையடுத்தே இப்பகுதியில் வல்லரசு நடமாட்டத்திற்கு தான் பொறுப்பல்ல என குவைத் கூறியுள்ளது [சி]

உலகச் செய்திகள்

'சில்க்வேர்ம்' ஏவுகணை தாக்கினல்———

## ஈரானுக்கு வர்த்தகத் தடை; அமெரிக்க செனட் அங்கீகாரம்!

வாஷிங்டன், ஜூலை 16

ஹோர்மோஸ் நீரிணையில் கப்பல்களை தாக்கும் 'சில்க் வேர்ம்' ஏவுகணைகளை ஈரான் பயன்படுத்தினுலோ அல்லது அமெரிக்கபடைகளை தாக்கினுலோ ஈரானுடனுன வர்த்தகத்தை துண்டித்துக்கொள்ளும் சட்ட அங்கீகாரத்திற்கு அமெரிக்க செனட்சபை ஆதரவளித்துள்ளது.

வளைகுடாவில் அமெரிக்கக் கப்பல்களை தாக்கும் எந்தவொரு நாட்டின்மீதும் வர்த்தகத் தடை விதிக்க இச்சட்டம் வகைசெய்யும்.

அமெரிக்கா ஈரானுடன் 70 கோடி ரூபா வரையிலான வர்த்தக தொடர்புகளை வைத்துள்ளது தற்போதைய நிலைமைகள் இதில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

கராச்சி குண்டுவெடிப்பு:

## இந்தியாவும் சோவியத்தும் பின்னணியில்! - பாகிஸ்தான் குற்றச்சாட்டு

கராச்சி, ஜூலை, 16

கராச்சியில் குண்டு வெடிப்புக்கு ஆப்கானிஸ்தானின் இரகசியப் பொலிசாரே காரணம் என்றும் இதன்பின்னணியில் இந்தியாவும், சோவியத் யூனியனும் இருந்ததாகவும் பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது.

சோவியத்யூனியனின் திட்டத்திற்கு அமைவாக ஆப்கான் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் சோவியத்தின் முயற்சியை ஏற்றுக்கொள்ளும்விதத்தில் பாகிஸ்தானை நிலைகுலையச் செய்யும் இந்தியா, சோவியத் யூனியனது திட்டத்தின் ஒரு பகுதியே இக்குண்டு வெடிப்புச் சம்பவமாகும் என்றும் பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் கூறினுர்.

## கப்பல் சொந்தக்காரருக்கு சிறைத்தண்டனை

ஒட்டாவா, ஜூன் 16.

கனடாவுக்குள் சட்டவிரோதமாக இந்திய அகதிகளை ஏற்றிச்சென்று இறக்கிய கப்பலின் சொந்தக்காரரான சுவீடிஷ் பிரசைக்குக் கனடிய நீதிமன்றம் 2 வருடச் சிறைத்தண்டனை விதித்துள்ளது. இவர்தம் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து இத்தீர்ப்பு வழங்கப்பட்டது

இவரது நடவடிக்கைக்கு உதவியாக இருந்த மற்றுமொருவருக்கு 3 மாதச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அந்தக் கப்பலில் சென்ற 174 பேரும் இந்தியர்கள் என்றும் இந்தியாவிலுள்ள அரசியல் பிரச்னை காரணமாகவே தா கனடாவுக்கு வந்ததாகவும் தெரிவித்தனர்.

## தே. இ. சே மன்ற கலாசாரகுழுவுக்குப் பயிலுனர் தேவையாம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின்கீழ் சண்டிபெல்வுட் ரூபமாஹினி கிராமத்தில் அமைந்துள்ள சங்கீத, நடன வாத்தியப் பயிற்சி நிலையத்திற்குப் புதிதாக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

விண்ணப்பதாரிகள் க பொ. த. (சாதாரண) பரீட்சையில் எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட சங்கீதம், நடனம் ஒரு பாடமாகச் சித்தியடைந்திருக்கவேண்டியதோடு, தேசிய சங்கீத நடனப் பரீட்சையில் ஆரம்ப மத்தி, இறுதிச் சித்தி அல்லது இராமநாதன் இசைக் கல்லூரி, மட்டக்களப்பு இசை நடனக் கல்லூரியில் சித்தியடைந்திருப்பின் விசேட தகைமயாகக் கணிக்கப்படும்.

16-20 வயதிற்குட்பட்ட திருமணமாகாத இளைஞர், யுவதிகளும் பாடசாலை செல்லாதோரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்களுடன் தாம்விண்ணப்பிக்கும் பிரிவினைத் தமது கடித உறையின் மேல்மூலையில் குறிப்பிட்டு "முகாமைத்துவப்

(5ம் பக்கம் பார்க்க)

## மீரான் மாஸ்டருக்கு குற்றப்பத்திரம் கையளிப்பு

[கொழும்பு]

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கடந்த 31 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சுழிபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சத்தியராஜன் (மீரான்மாஸ்டர்) [24 வயது] என்பவர் பூஸா இராணுவ முகாமிலிருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வைத்து குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

மேல்நீதிமன்ற நீதிபதி ஜி எல். எம். டி. சில்வா முன்னிலையில் இவ்வழக்கு நடைபெற்றது

அரசதரப்பில் சட்டத்தரணி அத்துலபத்தி நாயக்காவும், எதிரிதரப்பில் சட்டத்தரணிகள் கே. ஏ. ஜெகநாதன், ஜே. ஏ. எம் சிறில், ருஷாந்த சமரசிங்க ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி சி. இராஜரட்னமும் ஆஜராகியிருந்தனர்.

1-9-83க்கும் 11-12-85க்கும் இடைபட்டகாலகட்டத்தில் புளொட் இயக்கத்துக்கு உறுப்பினர்களை சேர்த்ததாக இவர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை அக்டோபர் 22-ல் ஆரம்பமாகவுள்ளது. (மா)

இந்திரா காங்கிரசை பிளவுபடுத்த முயற்சி———

# முன்னுள் 3 அமைச்சர்கள் கட்சியிலிருந்துநீக்கப்பட்டனர்

புதுடில்லி, ஜூலை 16

ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த முயன்றதாக முன்னுள் அமைச்சர்கள் மூன்றுபேரை கட்சியிலிருந்து அதன் தலைவர் திரு. ராஜீவ்காந்தி விலக்கியுள்ளார் என கட்சிப் பொதுச்செயலர் திரு. மூப்பனுர் தெரிவித்துள்ளார்.

இந்திராகாங்கிரஸ் கட்சிக்குள் பிரதமர் ராஜீவ்காந்திக்கு எதிரான முக்கிய அணிஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டே எம். பிக்களான திரு. அருண்நேரு, திரு. வி. சுக்லா, ஜரூப் ஹரித் முகமட்கான் ஆகியோர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர்.

மேற்படி மூவரிலும் திரு. அருண்நேரு பிரதமர் ராஜீவ் காந்தியின் மைத்துனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. ராஜீவ் காந்தி இந்தியப் பிரதமரானதும் கட்சியில் திரு. அருண்நேருவுக்கு இருந்த செல்வாக்கு குறைக்கப்பட்டதுடன் அமைச்சர் பதவியும் பறிபோனது. இதே நிலையே மற்றஇரு அமைச்சர்களுக்கும் ஏற்பட்டது.

கட்சிக்குள் ஒழுக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காகவே பிரதமர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் திரு. மூப்பனுர் தெரிவித்துள்ளார். [சி]

## கடவுச் சீட்டு விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர்ந்தன

(சுண்டுக்குளி)

கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவங்கள் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி விண்ணப்பப் படிவங்கள் கடந்த சில மாதங்களாக இங்கு இல்லாதிருந்ததினுல் வெளியில் 10 ரூபா முதல் 15 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது.

தற்போது இப்படிவங்கள் கச்சேரி புத்தகசாலையில் ஆளுக்கு ஒன்று வீதம் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். நீராவியடி கடையிற் சுவாமி சமாதிச் சிவாலய தெட்சணமூர்த்தி நவக்கிர மண்டலபூர்த்தி மகாசங்காபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. சங்காபிஷேகக் கிரியைகள் நாளை சனிக்கிழமை மாலை ஆரம்பமாகும். சங்காபிஷேகத்தை தொடர்ந்து அன்று மாலை சமயச் சொற்பொழிவுகள் சுவாமி உள்வீதிவலம் வருதல் என்பனவும் நிகழும். (ப)

## இடமாற்றம்

[சுழிபுரம், நிருபர்]

தொல்புரம் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் என். திருச்சிற்றம்பலம் மாங்குளம் அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க——

## வேலைநிறுத்தம் கொழும்பில்

## சுகாதார சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

அரசாங்க, தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு வழங்கப்படும் பட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையையடுத்து அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று மேற்கொண்ட வேலை நிறுத்தத்தையடுத்து கொழும்பில் பல சுகாதார நிலையங்கள் ஸ்தம்பித்தன.

இந்த இரு கல்லூரிகளுக்கும் எம். பி. பி. எஸ். பட்டமே வழங்கப்பட்டு வருகிறது. இதனை எதிர்த்தே அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது. சுகாதாரம் சம்பந்தப்பட்ட சகல சேவைகளும் அத்தியாவசிய சேவைகள் என நேற்று முன்தினம் அரசாங்கத்தினுல் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதனுல் அரசாங்க வைத்திய சாலைகளிலுள்ள வெளி நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஊ)

### மணிவாக்கு

பாழடைந்த கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமே! உன் திருநாட்களெல்லாம் வெறுநாட்களாய் அமைதியில் கழிகின்றன; உன்பூஜைக்குரிய இரவுகள் பல விளக்கேற்றவும் நாதியிலாமல் கழிகின்றன. — தாகூரின் "கீதாஞ்சலி"

# நமது நோக்கு

## தென்கொரிய மக்களுக்கு தீர்வு கிட்டுமா?

மக்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுவதால், அவர்களைப் பீடிக்கும் வியாதியும் வேறுபட்டது. இந்த மருத்துவ முடிவு இன்று மீளாய்வுக்குள்ளாகிறது.

நோய்கள் பல்வேறுபட்டிருந்தபோதும் அவற்றின் அடிப்படைக்காரணம் ஒன்றென்று இன்றைய கண்டுபிடிப்பாகக் கணிக்கப்படுகிறது. பல்வேறுபட்ட நோய்களுக்கு ஒரு மருந்து கொடுக்கப்படுவது இன்று சாதாரணம்.

அரசியலிலும் இந்த நவீன ஆய்வு பலனளிக்கலாம். தென்கொரியா ஆட்சிக்கும் இலங்கை ஜனநாயகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் பல. இருப்பினும் இவ்விரு நாடுகளும் பல்லாண்டுகளாக ஒரு தேசிய சமாதானத்தை அடைவதற்கு காணும்கனவு இன்னும் பலிக்கவில்லை.

தென்கொரியா எங்கே நாமெங்கே என்று விதண்டாவாதம் பேசுகிறவர்கள், இலங்கை கண்ட ஆட்சிமாற்றத்துக்குப் பின் ஜனாதிபதி ஆதரவுதேடி விஜயஞ்செய்த நாடுகளில் தென்கொரியா முதன்மையானது அங்கு சர்வாதிகார ஆட்சி சிவில் ஆட்சியாக மாறுகிறது; இங்கு சிவில் ஆட்சி சர்வாதிகாரஆட்சியாக மாறுகிறது.

அமெரிக்க றீகனோமிக்ஸ் (Reaganomics) என்ற தனித்துவ பொருளாதாரத்துவத்தைக் கடைப்பிடித்து நாட்டை வளம்படுத்திய நாடு தென்கொரியா. அதேபோன்று அமெரிக்க ஆதரவில் சர்வ வல்லமை பெற்ற ஜனாதிபதி ஆட்சி உருவானது. அது எதிர்க்கட்சிகளை அடக்கி, ஜனாதிபதி இட்டதே சட்டமென்ற போக்குகளின் எதிர்ப்பை சம்பாதித்தது.

தேசிய ரீதியில் எழுந்த எதிர்ப்பு, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையினத்தால் இழுபறிப்பட்டது. ஏழு வருடம் ஆட்சியில் அமர்ந்த ஜனாதிபதி சுண் டு ஹூவானுக்கு இது, தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு வாய்ப்பளித்தது.

இலங்கைபோல் அல்லாது ஆட்சியில் ராணுவம் தலையிடுவது சர்வசாதாரணம். ராணுவ ஆட்சியில் இது வெளிப்படை. இன்றும் தென்கொரியாவில் 40,000 அமெரிக்க துருப்புக்கள் நிலைத்திருப்பது வெளிநாடுகள் பல அறியாத புதிர்.

ஜனாதிபதியை மக்கள் நேரில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சி நீண்டகாலமாக வலுப்பெற்றுவந்து, அண்மையில் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்குவழிகோலியிருக்கிறது.

ஆட்சிக்கும் பெரும்பகுதி மக்களுக்கும் உண்டான விரிசல் அதிகரித்திருப்பதை உணர்ந்த ஜனாதிபதி சுண்டு டிசம்பரில் வருந்தேர்தலில் புதுஜனாதிபதியை மக்கள் நேரடி வாக்கால் தெரிவு செய்ய சம்மதம் தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சிகளையும் மாணவ சமுதாயத்தையும் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் - காவல்படை கொண்டு அடக்கிவந்த சுண் டு, இத்தகைய மனமாற்றத்துக்கு ஆளானது ஒரு மர்மமாகவே இருக்கிறது.

ஆளுங்கட்சியின் தலைவர் திரு. ரோ ஜனாதிபதி தேர்தலில் குதிப்பதாக அறிவித்ததே இந்த மனமாற்றத்துக்கு முக்கிய காரணமாகலாம் ஆளுங்கட்சியிலிருந்தாலும், ஜனாதிபதியின் அடக்குமுறைகளில் வெறுப்படைந்த திரு. ரோவை எதிர்க்கட்சிகள் ஆதரித்ததும், அவற்றின் ஆதரவைப் பெற்றிருக்கிறார்.

ஆட்சியின் முதல் எதிரியான திரு. கிம் என்பவருக்கு சிவில் உரிமை, அரசியல் கைதிகள் அனைவருக்கும் விடுதலை, பேச்சு சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் இவற்றை வழங்க ஜனாதிபதி சுண் டு உடன்பட்டிருக்கிறார்.

கடந்த சில வாரங்களாக நாட்டில் நடைபெற்ற கலவரங்கள் இந்தச் சடுதி மாற்றத்தின் உடனடி காரணமெனலாம்.

மாணவர் எதிர்ப்பு இலகுவில் அடங்குவதாயில்லை. ஜனாதிபதிக்கு இதுபெரும் விசனமளித்து வருகிறது. இலங்கையைப்போல் அங்கும் ஒரு பல்கலைக்கழக மாணவர் கொல்லப்பட்டார். ஆனால் அது காவற்படையின் அட்டூழியம்.

கடந்த சில வாரங்களாக அரசுக்கெதிரான சக்திகள் ஒற்றுமைப்பட்டதால் பல அரசியல் மாற்றங்கள் ஜனநாயக ஆட்சிக்கு சாதகமாகக் காணப்படுகின்றன.

நடாளாவிய நிலையில் தலைநகர் சியோலில் வருகிற வருடம் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் விளையாட்டை, அரசியல் ஸ்திரமின்மை காரணம் காட்டி சிலநாடுகள் பகிஷ்கரிக்கலாமென்ற அச்சம் பலருக்குமுண்டு.

இலங்கைபோல் எதிர்க்கட்சிகள் ஒற்றுமைப்பட முடியாதநிலையே தென்கொரியா திண்டாடுவதற்கு உதவுகிறது.

மிகவிரைவில் இந்த நாட்டுக்கு விடிவுகிட்டுமா வென்பது வெளிவரும். ராணுவ ஆட்சிக்குத் தூபமிட்ட அமெரிக்கா இன்று மக்கள் எதிர்ப்புக்கு மதிப்பளிப்பது போல் ஜனநாயகம் பேசுகிறது.

### இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி சுழிபுரம் பெரியபுலோ அரசடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல்விழா இன்று ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

# கன்னித் தமிழ் வளர்க்கும் கம்பன் கழகம்

'கம்பன் வாழ்க, கன்னித் தமிழ் வாழ்க' என்ற கோஷம் சில காலத்துக்கு முன்புவரை, ஈழத்தின் மூலை முடுக்கெங்கும் ஒலிப்பதைப் பலரும அறிந்திருப்பார்கள் இடையிலே ஏற்பட்ட- ஏற்படும் அசம்பாவிதங்களும் இரத்தக் களரிகளும் இந்தக் கோஷத்தைச் சற்றே மழுங்கடித்து விட்டமைபோல அண்மைக் காலங்களில் ஒரு தோற்றப்பாடு ஏற்பட்டது ஆனால் கவிச்சக்கரவர்த்தி கம்பன் போலவே அவனை நினைவு கூரும் கம்பன் கழகமும் உயிர்த்துடிப்புடன் எந்தத் தடையினையும் கடந்து மேலோங்கும் என்பதற்கு, அது இன்று எடுக்கும் கம்பன் விழாவே தக்க சான்றெனலாம் கம்பனால் கன்னித் தமிழ் வாழ்கின்றது. இலங்கைக் கம்பன் கழகத்தால் கம்ப இலக்கியம் ஈழமெங்கும் தூண்டாமணி விளக்காகச் சுடர்கான்று கொண்டிருக்கிறது எனலாம்.

இலங்கைக் கம்பன் கழகம் பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள், சொற்பொழிவுகள் வாயிலாகக் கம்பனின் கவித்திறனை மட்டுமன்றித் தமிழர்க்கு வேண்டிய வாழ்விலட்சியங்களையும் எடுத்துரைத்தும் இடித்துரைத்தும் வந்துள்ளதால் அது ஈழத்தின் மொழி, கலாசார சமுதாய நெறிகளிலே கணிசமான தாக்கத்தினையும் ஏற்படுத்திள்ளது. ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் புதுமையினூடாகப் 'பெரும் புதுமை முழுப்புதுமை' என்று சென்றுகொண்டிருந்த வேளையில் அவர்களின் கவனத்தை பின்நோக்கவும் வைத்துப் பழைமையில வேரூன்றிப் புதுமையில் விளைவு காண வைத்த பெருமையும் கம்பன் கழகத்தினர்க்கு உண்டு,

இலக்கியத் திறனாய்வு, உணர்வு, கருத்து வெளிப்பாட்டுத்திறன், விவாதிக்கும் ஆற்றல் என்பன நிறைந்த ஓர் இளம்பரம்பரையினைக் கம்பன் கழகம் உருவாக்கியுள்ளதோடு தமிழறிந்த முதியோரையும் முனைப்பாகச் சிந்திக்க வாய்ப்பளித்து, அவர்களின் சிந்தனைகளையும் மக்களுக்கு வழங்க வைத்துள்ளமையால் அது கலை இலக்கிய இணைப்புப் பாலமாகவும் இயங்கிவருகின்றது.

ஈழத்துத் தமிழரைப் பொறுத்தவரையிலே 'நெல்லிக்காய்ச் சிதறல்' பண்பே அவர்களில் அதிகம் என்பது கடந்த வரலாறு. 'சிமேந்திணைப்பு' நிலைகுறைவாகத் தான் இருந்துவந்தது, இதன் காரணமாகக் கலை, கலாசார நிறுவனங்கள் தமக்கென நிலையான ஒரு கட்டத்தைப் பெற்று ஒழுங்காக இயங்கின என்ற வரலாறே இல்லை. இந்த வகையிலும் கம்பன் கழகம் முன்மாதிரியாய் விளங்கி ஒட்டல் வேலையைத் திறமையாகப் புரிந்துள்ளமைக்கு நல்லூர் கோயில் வீதியிலே எழுந்து நிற்கும் 'கம்பன் கோட்டமே' தக்க சான்று அதற்கும் சிறியதொரு 'முண்டுக் கண்டம்' ஏற்பட்டாலும் 'குன்றன்ன கொள்கை'யரான அதன் தொண்டர்தம் பெருமையால் தொடர்ந்து பொலிவுடன் திகழ்கின்றது. அது மேலும் பொலிவுற்று மேல்மாடிமண்டபமும் பெற்றிடத் தமிழார்வலர் தம் ஆக்க ஊக்க உதவிகள் அவசியம் தேவைப்படுகின்றன.

இவ்வாண்டு நிகழவுள்ள 'கம்பன்விழா' விரக்தியும், வேதனையும் நிறைந்து வீழ்ந்து கிடக்கும் ஈழத்தமிழ்ச் சமுதாயத்தை உயிர்ப்பித்து எழ வைக்கும் சஞ்சீவியாக விளங்க வாழ்த்துகின்றோம்.

கம்பன் கழகம் வாழ்க, வளர்க.

சொக்கன்

## சைவ சமய நூல்கள்

எங்கள் சைவசமயம் நீண்ட வரலாற்றினை உடையது. பரந்த பிரதேசத்தில் அநுட்டிக்கப்பட்ட சிறப்பினை உடையது இதனால் நம்சமய உண்மைகளையும் அடிப்படைகளையும் அநுட்டானக் கிரமங்களையும் கூறும் நூல்கள் பலவாயுள்ளன.

பதிபசுபாசம், ஆணவம் கன்மம் மாயை என்பனபற்றிய நுட்பங்களையும் விளக்கங்களையும் உணர்த்தும் நூல்களே அநேகம். இவை பல கோணங்களில் அமைந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் தன்மையும் முதன்மையும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் என்னும் சித்தாந்த நூல்




களுக்கு உண்டு. இவற்றோடு இன்னும் பன்னிரண்டு நூல்கள் சைவசித்தாந்த சாஸ்திரங்களாக உள்ளன.

தோத்திரங்கள் எண்ணில்லாதன இருந்தாலும் சைவத் தமிழ் மக்களுக்கு பிரமாண்டமான, சகலராலும் அங்கீரிக்கபட்ட-ஒவ்வொருவரும் அவசியம் தோத்திரம் பண்ணவேண்டிய சிறப்புடையனவாகப் பன்னிரு திருமுறைகள் விளங்குகின்றன.

சைவ மக்களின் ஆலயச் சடங்குகள், தீட்சை முதல் அந்தியேட்டி வரையிலான சடங்குகள் பற்றிய செயல் முறைகளையும் விளக்கங்களையும் கூறுவன சைவ ஆகமங்களேயாகும். இவற்றின் பிரயோக நூல்களாக மதிக்கத்தக்க பத்ததிகளே இக்காலத்தவர் பின்பற்றத்தக்க வசதி படைத் தனவாயுள்ளன.

ஆகமங்கள் அங்கீகரிக்கும் நான்கு வேதங்களும் வேதாங்

(6-ம் பக்கம் பார்க்க)

## மறைந்த யாழ். ஆயர்——— எமிலியானுஸ்பிள்ளையின் 15-வது நினைவுதினம்

இன்று மறைந்த யாழ். ஆயர் மகா. வந் ஜெ. எமிலியானுஸ்பிள்ளையின் பதினைந்தாவது நினைவு தினமாகும். அன்னாரை யாழ் மறைமாவட்டக் கத்தோலிக்க மக்கள் மட்டும் அல்ல அனைத்திலங்கை மறைமாவட்டமக்களும் நினைவு கூருகிறார்கள்.

சிறந்த கல்விமானாகவும் விரிந்த மனப்பான்மையுடையவராகவும், பரந்த நோக்குடையவராகவும் கனிந்த போக்குடையவராகவும் விளங்கினார். புன்முறுவலினாலேயே ஏங்கித் துடித்துத் தவித்து வரும் நெஞ்சங்களை எல்லாம் மனம் மகிழவைத்தார். மறையியலில் மட்டுமன்று உலகியலிலும் சிறந்த ராஜதந்திரியாகவும், நிர்வாகத்திறனுடையவராகவும் விளங்கினார். நிறைந்த அநுபவம், சிறந்த சொல்வளம்ஆழ்ந்த கருவூலம் கொண்டவராய் விளங்கினார்.

கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொது முகாமையாளராவும், குருமுதல்வராகவும் பணியாற்றிய காலங்கள் இவரது பணிகள் இவரது திறமைக்கும் கடமைக்கும் எடுத்துக்காட்டு பாடசாலைகளை விஸ்தரிப்பதிலும், கல்வி அறிவை மக்களுக்குக் கருத்தோடு ஊட்டுவதிலும் காண்பித்த திறன் அளவிடற்கரியது. ஆசிரியர்கள் மீது அவர் கொண்டிருந்த தனிமதிப்பும் பாசமும் அவர்கள் இவரிடத்தில் வைத்திருந்த பக்தியும் விசுவாசமும் அவர்களைத் தூய பணிபுரிவதற்கு மென்மேலும் ஊக்குவித்தது.

குரு முதல்வராக விளங்கிய காலப்பகுதியில் மறைபணியில் அவர் ஓர் சிறந்த உதாரணராக விளங்கினார் அவரிடம் சிறந்த ஆளுமைத்தன்மை காணப்பட்டது. அத்துடன் மற்றோர் வியக்கத்தக்க முறையில் ஆளுகை செய்தார் இவருக்கு முன்மறைந்த மகா. வந். யோண் அல்பிரெட்கியோமார் ஆண்டகையின் பெருமதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரரானார்.

யாழ்.மறை மாவட்டத்தில், அகில இலங்கையின் முதல் தமிழ் ஆயராகக் கடமையாற்றிய காலம் வரலாற்றில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய காலமாகும். அனைவருக்கும் அன்புத் தந்தையாக, அன்பாலும்,பண்பாலும், சொல்லாலும், செயலாலும் சிறந்து விளங்கினார். கையிட்ட நற்கருமங்கள், செயல்கள், திட்டங்கள் அனைத்தையும் இனிதே நிறைவேற்றுவதிலும், முழுமையாக்குவதிலும் சிறந்துவிளங்கினார்.

நல்லாலோசகராகவும்பழுத்த அநுபவசாலியாகவும் விளங்கி பிறமதமக்களாலும், தலைவர்களாலும் அன்புடன் நேசிக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வந்தார்.

இன்று இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் கூட

(5-ம் பக்கம் பார்க்க)

## ஆடி பிறக்குது! ஆறுதல் பிறக்குமா?

ஆடி பிறக்குது! ஆவல் பிறக்குது!
ஆறுதல் பிறக்குமா? ஏங்குகிறோம்!
கூடி இருந்தநாம் ஓடி மறைகிறோம்!
கதியற்றோர் ஆகியே கலங்குகிறோம்!
வாடிவதங்கியே செந்தமிழ் உள்ளங்கள்
வழியற்று வகையற்று விளங்குவதோ?
நாடி இருக்கின்ற நன்மை விளைந்திட
நாதன் திருவடி நினைந் திடுவோம்!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

(இன்று ஆடிப்பிறப்பு)

## ஹாட்லி மாணவர்க்கு அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

க பொ த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் யாழ். கல்விக் கந்தோர் வளவிலுள்ள சி. சி. ரி. எம். எஸ். பாடசாலையில் வைத்து வழங்கப்படும்

க பொ.த [உயர்தர] ஹாட்லிக் கல்லூரி பரீட்சார்த்திகள் இந்த அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். [ஒ]

### தே. இ. சே. மன்ற

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர், வ/ப, இளைஞர் சேவைகள் சங்கீத நிறுவனம். தேசிய இளைஞர் நிலையம், ஹாவலெவல் வீதி, மஹரகம" என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குபடி கேட்கப்படுகின்றனர். (மா)

### தவறுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அச்செய்தியில், "நீதவான் இக்கொலைக்குக் காரணமான சந்தேகநபர்களான இராணுவத்தினரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்." என வெளியாகியிருப்பது தவருகும்.

யாழ். மேலதிக நீதவான் வ. சிதம்பரநாதன் அளித்த தீர்ப்பில், "கொலை எனத் தீர்ப்பளித்து பொலிஸாரை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (ஆ-ர்)

### மறைந்த

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நன்கு அறியப்பட்ட, பிரசித்தி பெற்ற யாத்திரைஸ்தலமாக விளங்கும் மருதமடு பதியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இவரேகாரணர் என்று கூறினல் இவர் மடுஅன்னையின் மேல்மைத்திருந்த பக்திதான் மூலகாரணமாகும்.

மன்னர் மறைமாவட்டம் யாழ்.மறை மாவட்டத்துடன் இணைந்திருந்த காலத்தில் மன்னரின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அவரின் மகத்தான சேவையே காரணமாகும் அவர்களுக்காக அவர் அரசின் உதவியுடன் செயல் படுத்திய திட்டங்ளும் பல இதனைமன்னர்மக்கள் இன்றும் நன்றியோடு நினைவுகூறுகின்றார்கள்.

சமூக, சமயத்துறைகளில் தீவிரமாகச்செயல்பட்டுமக்கள் பணிக்கும், இறை பணிக்கும் தன்மையே முற்றுமுழுதாக அர்ப்பணித்து ஆற்றல்மிதந்த சாதனையாளனுய் விளங்கினர்

அன்னரின் ஆன்மா அமைதியுற ஆசிப்போம்.

-மோ. நார்சிசியர்.

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

E. N. 8332 A 50 கார் சீரமைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: அண்ணமலை வைத்தியசாலை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (9878)

சுன்னகம் பஸ் நிலையம் முன்பாக உள்ள சக்தி என்ரர் பிறைஸ் அச்சகம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். மரியநாயகம். [9879]

## இடம்பெயர்ந்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மதி அடையாள அட்டைகளை தபாலில் அனுப்புவதும்கூட கல்வித்திணைக்களத்திஞல்சாத்தியமில்லாதிருக்கையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளை மட்டும் அப்பகுதியிலேயே பரீட்சைக்குத் தோற்றும்படி வற்புறுத்துவது என்ன நியாயம் என பெற்ருேர் கேட்கின்றனர்.

அப்பிரதேசத்தைவிட்டு வெளியேறியுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு வேறுஒரு இடத்தில் பரீட்சை நிலையம் ஒன்றை ஏன் ஏற்படுத்த முடியவில்லையென அவர்கள் கேட்கிருர்கள். வடமராட்சிப் பிரதேச பரீட்சார்த்திகளுக்கான அடையாள அனுமதிப்பத்திரங்கள் கல்விக் காரியாலயத்திலேயே வழங்கப்படுகின்றன கல்லூரி மாணவர்களான பரீட்சார்த்திகளுககு மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இவ்வாறு மாற்றுஇடம் வடமராட்சிக்கு வெளியில் ஏற்பாடு செய்துதரும்படி அவர்கள் கேட்டுள்ளனர்.

### பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், பூநகரி.

## வெற்றுச்சாக்கு கேள்வி கோரல்

கீழ்க்காண் விபரப்படியுள்ள வெற்றுச் சாக்குகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன வெற்றுச் சாக்குகளை பிரதம சங்கத்தில் பார்வையிட்டுக்கொள்ளலாம் விண்ணப்ப முடிவுத்திகதி 31 - 7 - 87.

| | | |
|---|---|---|
| 1. | 80 படி சாககு | 2675 |
| 2. | 112 படி சாக்கு | 1953 |
| 3. | மாவு சாக்கு | 1312 |
| 4. | சீனி சாக்கு | 723 |
| 5. | பலரகம் | 353 |
| | | 7016 |

இங்ஙனம்

பொதுமுகாமையாளர்

பூநகரி ப. நோ. கூ. சங்கம்

பூநகரி.

(ஏ 1930)

## 41-ஆவது நாள் நினைவஞ்சலி



தவசி

கந்தசாமி

(சின்னமாமா)

மலர்வு: 26-09-1946

உதிர்வு: 06-06-1987

வீரம் நிறைந்த உன் உடம்பை விடுதலைக்காய் பலி கொடுத்து நீ பிரிந்த சில நாளில் உன் உடல் மறைந்தாலும் தமிழீழ வரலாற்றில் உன் கதையும் பதியுமடா.

உன் நினைவை மறவாத

சகோதரர்கள், மருமக்கள் பெருமக்கள், உறவினர்கள்.

பாரதி வீதி,

அச்சுவேலி.

(சி 9877)

### வடமராட்சிக்கு

## இன்று முதல் வழமையான பஸ்சேவை

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சிப் பகுதியில் இன்று தொடக்கம் வழமையான பஸ் சேவை நடைபெறவுள்ளதாக யாழ். வானொலி அறிவித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள அரச அலுவலகங்களில் கடமையாற்றும் சகல அரச உத்தியோகத்தர்களும் இன்று தொடக்கம் தமது கடமைகளுக்கு செல்லுமாறும் யாழ் வானொலி வேண்டுகோள் விடுத்தது. (ஒ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் குடாநாட்டில் உள்ள அகதிகள் பிரச்னை இந்திய உணவு விநியோகம் சம்பந்தமாக நாளை சனிக்கிழமை யாழ் பல்கலைக்கழககைலாசபதிஅரங்கில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னர், வவனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், பிரஜைகள் குழுக்கள் ஆகியனவற்றை சமூகமளிக்குமாறு அகதிகள் சேவைக்குழுவினர் கேட்டுள்ளனர். [வா]

## இனந்தெரியாத சடலம்

யாழ்ப்பாணம், வெள்ளி.

கிளிநொச்சியில் வாய்க்கால் ஒன்றுக்குள் இனந்தெரியாத சடலமொன்று கிடப்பதாக தெரியவந்துள்ளது.

பிரதான வீதியில் கிளிநொச்சிக்கும், பரந்தனுக்கு மிடையில் உள்ள வாய்க்காலுக்குள் இந்தச்சடலம் குப்புற படுத்தநிலையில் காணப்படுகின்றதாம.

இச்சடலம் கிடக்கும் இடத்திற்கும் பரந்தன்சந்தி இராணுவ முகாமிற்கும் இடையே சிறிதளவு தூரம் இருப்பதால் இதுவரை அச்சடலத்தை எவரும் மீட்க முன்வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (வா)

## முதலாண்டு நினைவஞ்சலி

விடுதலைப்போர் வேங்கை

செபஸ்ரியாம்பிள்ளை

ராஜ்குமார்

(ஜெகா)

தாயின் மடியில் மலர்வு:

03-09-1962

தமிழ்ஈழ மண்ணில் உதிர்வு:

17-07-1986

செல்வ மகனே! நீர் தாண்டு, ஓராண்டு இருந்தும் எமக்கு மாருத பூச்செண்டு. ஜென்மத்தில் நீர்செய்ததிருத்தொண்டு கண்டு பொறுக்காமல் சாய்ந்ததோ இளங்கண்டு ஒப்பற்ற இலட்சியத்தை, உன் இதயத் தாகத்தை இப்புவியில் வென்றெடுக்க உறுதியுடன் நின்றவேளை மகனே உன் விதிவசத்தால் தளிர்களினை உதிர்த்துவிட்டாய். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கும்:

பெற்ருேர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

முல்லைத்தீவு,

மலல்குடியிருப்பு,

(சி-9876)

## மந்திகை ஆஸ்பத்திரியில் 50 நோயாளர் மட்டுமே இப்போது உள்ளனர்?

யாழ்ப்பாணம், வெள்ளி

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஐம்பது நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெற்றுவருவதாக மேற்படி வைத்தியசாலையிலிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஐம்பது நோயாளர்களுக்கும் சிகிச்சையளிக்கும் பணியில் இரு வைத்தியர்களும் மூன்று தாதிமாரும், மூன்றுசிற்றூழியர்களும் பணியாற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்ஆஸ்பத்திரியில் உணவுப் பொருள்கள் இல்லாமையால் இங்குள்ள நோயாளர்களும், டாச்டர்களும், தாதிமாரும், சிற்றூழியர்களும் கடந்த சில தினங்களாக தேநீரையே குடித்து வந்தனர்.

மந்திகை ஆஸ்பத்திரிக்கருகில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் தமக்குக் கிடைத்த உணவுப் பொருள்களில் சிலவற்றை இந்த ஆஸ்பத்திரியிலுள்ளவர்களுச்கு இப்போது வழங்கியுள்ளனர். [ஒ]

## 'ஐலன்ட்பிறைட்' கப்டன் அடைந்த பெருமை

(சென்னை)

"உலகமே கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் இலங்கைத் தமிழருக்காகஉணவுப்பொருட்களை ஏற்றிச்செல்லும் முதல் நிவாரணக்கப்பலை செலுத்திச் செல்வதில் பெருமைப்படுகிறேன்.".

இவ்வாறு 'ஐலண்ட்பிரைட்' கப்பல் கப்டன் அமிதாப் முகர்ஜி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு இந்தியா வழங்கிய நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு 'ஐலண்ட் பிரைட்' புறப்படுவதற்குசற்று முன்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர்.

இத்தவேளை இக்கப்பல் புறப்படுவதற்கு முன் ஒரு துணியில் ஏதோ எடுத்துக்கொண்டு கப்பலருகில் வந்த ஒரு பெரியவர் தன் வீட்டிலிருந்து அரிசி கொஞ்சம் கொண்டுவந்திருப்பதாகவும் இந்தக்கப்பலில் செல்லும் உணவுப்பொருட்களுடன் சேர்த்து இந்த அரிசியையும் யாழ். தமிழனுக்கு கொடுத்து விடும்படி கப்பல் அதிகாரியிடம்கெஞ்சிக்கொண்டிருந்தாராம். இத் தகவலை 'ஜூனியர் விகடன்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

### ஜயவர்த்தன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள்ஆரம்பிக்கப்படும்.

விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவர்கள தமது அடையாள அட்டையுடன் 19ம் திகதி ஞாயிறுக்கிழமை மாலை 5 மணிக்கு தத்தம் விடுதிகளுக்குச்செல்லவேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

மூன்றும் ஆண்டு மாணவர்களையும் இறுதியாண்டு மாணவர்களையும்தவிர ஏனையஆண்டு மாணவர்கள் எவரும் பல்கலைக்கழக வளவுக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. [வா]

### பருத்தித்துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்தனர்.

அங்கு நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்ட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், நெல்லியடி, பருத்தித்துறைப் பகுதியில் சொற்பமக்களே இன்னமும் இருப்பதாகவும், அவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளே இப்போது செய்து கொடுத்திருப்பதாகவும், வடமராட்சி சூனியப் பிரதேசமாகக் காட்சியளிப்பதாகவும் தெரிவித்தார். (வா)

### ஆர். வெங்கட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதவியேற்பார். தற்போதைய குடியரசு தலைவர் திரு ஸெயில்சிங்கின் பதவி இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடைகிறது.

குடியரசுத்தேர்தலில்வெற்றி பெற்ற திரு ஆர். வெங்கட்ராமனை திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர், தற்போதய குடியரசுத்தலைவர் திரு. ஸெயில்சிங் ஆகியோர் வாழ்த்தியுள்ளனர்.

### தேர்தல் முடிவு விபரம் வருமாறு!

திரு. ஆர். வெங்கட்ராமன் (கா. ஐ.) 740 148 வாக்குகள், எதிர்க்கட்சி வேட்பாளர் முன்னுள் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் 281 550 வாக்குகள், சுயேட்சை வேட்பாளர் திரு. மிதிலேஷ் குமார் 2223 வாக்குகள். (வா)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### பேராசிரியர் நினைவாக நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை பேராசிரியராக இருந்த அமரர் சோ. செல்வநாயகத்தின் நான்காவதுஆண்டுநினைவுதினத்தையொட்டி பேராசிரியரின் மனைவி திருமதி செல்வநாயகம் யாழ் பல்கலைக்கழகத்திற்கு சுமார் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை நேற்று அன்பளிப்புச்செய்தார். [ஒ]

## வர்த்தகர் சங்கத்திற்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு வழங்குவதற்கு இப்போது சாரங்கள் தேவைப்படுவதால் அவற்றைக்கொடுத்துதவுமாறு அகதிகள் புனர்வாழ்வு அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அவர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோளில் மேலும் கூறியிருப்பதாவது:

வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்காக யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையம் உடுபிடவை திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உடுபுடவைகளில் 'சாரம்' தவிர்ந்த ஏனையஉடைகள் போதியளவு கிடைக்கப்பெற்றுள்ளதால் தங்களின் கடை நேரத்தில் வரும் மாணவர்கட்கு முக்கியமாக சாரங்களைக்கொடுத்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன் வர்த்தக சங்கத்தினரைக் கேட்டுக்கொள்கின்ருேம். [வா]

### 5வது


(1ம் பக்கத் தொடச்சி)

### எம். வி. நிக்கோரேட் உணவுப்பொருள் விபரம்

300 தொன் புழுங்கல் அரிசி, 150 தொன் சர்க்கரை, 110 தொன் கோதுமை மாவு, 285 தொன் மைசூர் பருப்பு, 70 தொன் பருப்பு, 30 தொன் பால்மா, 35 தொன் சமையல் எண்ணை, 35 தொன் மண்ணெண்ணை. (வா)

# 'வடமராட்சி முழுவதும் பாலைவனமாகிவிட்டது'

## வீடுகள். கடைகள் பல தரைமட்டம்!



சுட்டிபுரம் ஆலய மடத்தில் தங்கியுள்ள சிலகுடும்பங்கள்

சுட்டிபுரம் அம்பாள் ஆலயம். கொடிகாமம் -பருத்தித்துறை வீதியில் உள்ள வரணியில்அமைந்துள்ளது இது ஒரு பிரசித்திபெற்ற ஆலயம். வருடந்தோறும் குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் மக்கள் அங்கு விழா நாட்களுக்கு திரளுவார்கள். போட்டி திருவிழாக்கள், சிகரம், சின்ன மேளம் வாண வேடிக்கை எல்லாமே போட்டி தான். இவற்றை பாராதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

அடர்ந்துசெழித்து வளர்ந்த மரக்கூட்டங்களுக்கு நடுவே அம்மாள் குடிகொண்டு இருக்கிறார். வீதியின் அருகே இரண்டொரு சிறிய மடங்கள். செல்லும் வாகனம் எதுவும் நில்லாமல் போவதில்லை. தொல்லைகள் துயரங்கள் தொடர்ந்துவரும் துன்பங்களுக்காக அங்குவந்து இரவு பகலாக பக்தர்கள் பழிகிடப் பதுமுமுண்டு புதுமை மிக்க கோவில்; மகிமையுள்ள அம்பாள்.

வடமராட்சியில் சொத்துக்களை, தேடிய தோட்டங்களை தோட்டம் துரவுகளை இழந்த மக்கள் கால் நடையாக வந்து அந்த ஆலயத்தில் ஆயிரக் கணக்கில் பழி கிடந்தார்கள்.

கஷ்டத்தை போக்குமாறும் கவலையை தீர்க்குமாறும் தினமும் வேண்டினார்கள், ழுபட்டார்கள்.

அங்கு நாங்கள் சென்ற போது நண்பகல் நேரம் திருவிழாபோன்று ஜனத்திரள். எலலோரும் அகதிகள். குடும்பம் குடும்பமாக இருந்து உணவு தயாரித்துக் கொண்டிருந்தனர்.

### தண்ணீருக்கு இழுபறி

தெருவோரத்தில் உள்ள ஒரு சிறிய மடத்தில் அப்பொழுதுதான் சில குடும்பங்கள் வந்து தங்கி களைப்பாறின சிறுவர்களின் காலைத் தூக்கி, உள்ளங்கால்களை தடவிப் பார்த்தார்கள். சுட்டெரிக்கும் வெய்யில் அச்சிறுவர்களை விட்டுவைக்கவில்லை. வாடி வதங்கியிருந்தார்கள். பசிக்கொடுமையால் குழந்தைகள் துடித்தனர். போத்தலில் கொண்டு வந்த தண்ணீரை தாயார் ஒருவர் எடுத்து குடுக்க, அதை இரு குழந்தைகள் இழுத்துப்பறிக்க, அப்போத்தல் சிமெந்து தரையில் விழுந்து உடைந்து சிதறியது. இரு குழந்தைகளுக்கும், தாயார் மாறிமாறி அடித்தார். இந்தப் பரிதாபத்தை பார்த்த பக்கத்திலிருந்த ஒரு குடும்பத்தினர் தண்ணீர் கொடுத்துதாகத்தை தீர்த்தனர்.

சகல சொத்துக்களையும் இழந்துவந்துள்ள அந்த தாயாருக்கு இப்போ அந்த போத்தல் பெரிய சொத்துப்போல் தோன்றியிருக்க வேண்டும். குழந்தைகளும் என்ன செய்வார்கள். அதிகாலை வீட்டிலிருந்து புறப்பட்டவர்களுக்கு வழி தெருவில் எங்குமே பசியாற்ற முடியாத நிலை. காலை அருந்தியிருக்க மாட்டார்கள். வரும் போது அவர்களுக்கு வழி மறித்து தண்ணீரோ தாகம் தீர்க்க மோரோ, கஞ்சியோ கொடுப்பதற்கு வீடுகளில் எவரும் இல்லை வந்ததோ கடைகள் இல்லாத வயல் பாதை. இப்படி எத்தனையோ கண்ணீர் கதைகள்.

### வயோதிபர்கள் மட்டும் தான்

வல்வெட்டித்துறையை சேர்ந்தவர் க சுந்தரம் அயலவர்களுடன் நடந்து வந்திருந்தார். ஒரு சில வீடுகளில் வயோதிபர்களைத் தவிர அங்கு எவருமே இல்லை என்றார்.

பல வீடுகள் தரைமட்டம். ஒன்றரை மாதமாக மின்சாரம் கிடையாது. கடைகள் கட்டடங்கள் எதுமே இல்லை. வடமராட்சி பாலைவனம் போல் காட்சியளிக்கிறது என்றார் அவர்

"எல்லோரும் வெளியேறி விட்டார்களா? என்றேன்.

கடந்த மாதமே எண்பது வீதமானோர் வெளியேறி விட்டனர். நெல்லியடி முகாம் தாக்குதலுக்குப்பின் நடந்த ஷெல் அடிகளைத் தாங்க முடியாமல் மிகுதிப்பேரும் புறப் பட்டுவிட்டனர் என்றார்.

வடமராட்சி அகதிகள் – 4

### குடும்பங்கள் வெளியேற்றம்

ஆலயத்தில் தங்கியிருந்தவர்கள் பலர் கடந்த ஞாயிறு காலை வெளியேறிவிட்டனர். மக்களை வந்து சுட்டிபுரம் ஆலயத்தில் தங்குமாறு படையினர் வானொலி மூலம் தெரிவித்தனர். உடனடியாகவே பல குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி விட்டன. அச்சம் தான் காரணம்.

ஆலயத்தில் தங்கியிருக்கச் சொல்லிவிட்டு ஷெல் அடிப்பதும், கோவில்களில் தங்கியிருக்கச் சொல்லிவிட்டு குண்டு மாரி பொழிவதும் இப்போ வழக்கமாகி விட்டது. இது சின்னஞ் சிறிசுகளுக்குக் கூட தெரிந்த விடயம். கோவில்களில் இருந்த பலர் கொடிகாமம் நோக்கிப் புறப்பட்டு விட்டனர். ஆனால் ஞாயிறு எதுவமே நடக்கவில்லை. ஹெலி நடமாட்டம் கூட அன்று இருக்கவே இல்லை. அதனால் அதன் பின் வடமராட்சியிலிருந்து வந்துசேர்ந்தவர்கள் ஆலயத்தில் தங்கினார்கள்.

### நினைத்தது நடந்தது

அகதிகள் எதற்குப் பயந்தார்களோ அது நடந்தே விட்டது. இரு தினங்களுக்கு முன் மோசமான ஹெலித் தாக்குதல். அகதிகள் சிலர் காயமடைந்தனர். ஆலய முற்பகுதிக் கொட்டகை தீக்கிரையானது. அத்தனை அகதிகளும் இரவிரவாக வெளியேறி விட்டனர். மறுநாள் அதிகாலை கொடிகாமம் அகதிகள் முகாம்கள் நிரம்பி வழிந்தன அங்கு இடமின்றி பல குடும்பங்கள் தனியார் வீடுகளில் தஞ்சமடைந்தன

சுட்டிபுரம் ஆலயத்தைச் சுற்றியுள்ள அடர்ந்த மாங்களுக்குக் கீழே பலர் உறங்கிக் கொண்டிருந்தனர். குளிர்ச்சியான காற்று, அமைதியான இடம், வெயிலோ வெப்பமோ இல்லாத சுற்றாடல் அங்கு தங்கி அம்பாளைத் தரிசித்துச் சென்றாலே துன்பமெலாம் பறந்தோடி விடும். அதற்காகவே அடியார்கள் சிலர் அங்கு நிரந்தரமாகத் தங்குவதுண்டு. தீராத நோய்கள்; மாறாத வருத்தங்களினால் பீடிக்கப்பட்டவர்களும் அங்கு தினமும் வந்து தரிசிப்பதுண்டு. அப்படியான சிலரும் வந்துசென்றார்கள்

நீராட போதிய வசதி அங்குண்டு. நித்திரை கொள்ள சுத்தமான நிலம் அங்குண்டு. சுற்றாடல் முழுவதும் சுத்தமாகவே காணப்பட்டது சுகாதாரம் பேணப்பட்டது

அப்பொழுது அங்கு சில குடும்பங்கள் வந்துகொண்டிருந்தன. வடமராட்சிப் பக்கம் நோக்கி இடையிடையே பீரங்கிக் குண்டுச் சத்தம் கேட்டன. வந்து சேர்ந்த குடும்பங்களிற் சில அங்கு தங்கின. வசதியான ஒரு இடம் பார்த்து அங்கு மூடை முடிச்சுக்களை வைத்தனர். சில குடும்பங்கள் அந்த உச்சி வெயிலில் பயணத்தைத் தொடர்ந்தன.

(தொடரும்)

**கா. யோகநாதன்**

---

## தகவல் தாருங்கள்

'அண்ணா சிலையடி' கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த திரு வீ. பாலசிங்கம் (வயது 34 திருமணமானவர்) கடந்த 29 5 87 மாலை 5-30 மணியளவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் கூட்டிச் செல்லப்பட்டார். இதுவரை இவரைப் பற்றிய தகவலெதுவும் கிடைக்கவில்லை. மேற்குறித்த திகதியின் பின் இவரைப் பற்றிய தகவல்களை யாரும் அறிந்திருந்தால் பின்வரும் விலாசத்துடன்தொடர்பு கொள்ளவும்

வீ. இராசையா,<br>(சகோதரர்)<br>239, ஆசீர்வாதப்பர் வீதி,<br>அரியாலை மேற்கு,<br>யாழ்ப்பாணம்

★

பருத்தித்துறை (புலோலி) இலங்கை வங்கியில் கடமை புரியும் வகிரியைச் சேர்ந்த கி ஜெகநாதன் தனது பெற்றோர் நா. கிருஷ்ண பிள்ளை, கி. நல்லம்மா ஆகியோரைப் பற்றிய தகவலறிய விரும்புகிறார். பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கி. ஜெகநாதன்.<br>இலங்கை வங்கி,<br>சுன்னாகம்

கோ. சேதுகாவலர்,<br>இலங்கை வங்கி,<br>சாவகச்சேரி.

★

கரவெட்டி மேற்கு, உச்சில் ஒழுங்கையைச் சேர்ந்த எமது தந்தை ஆ. வாரித்தம்பி, சகோதரர் வா. ஆழ்வாப்பிள்ளை [ஆசிரியர்], சகோதரரி குடும்பத்தரின் திலைநாயகி/கணபதி, திருமதி அன்னலட்சுமி நவராஜா, செல்வி கமலநாயகி மற்றும் ஆ. சிற்றம்பலம்[தபால் சேவகர்] குடும்பத்தினர் பற்றிய தகவலை அறியத்தரவும்.

ஏ. வி. மாணிக்கம்,<br>(ஆசிரிய பதி)<br>ஈழநாடு லிமிட்,<br>யாழ்ப்பாணம்.

★

பருத்தித்துறையைச் சேர்ந்த குழந்தை நல வைத்தியரும், செட்டி கந்தையா வைத்தியரின் பேரனுமான ஆயுர்வேத வைத்தியர் ந. பத்மநாதன் குடும்பத்தினரை திரு. வே முருகசுச்சுவாமி தேடுகிறார். தகவலறிந்தவர்கள் கீழ்க் காணும் விலாசத்திற்கு அறியத் தரவும்.

வே. முருகேசு சுவாமி<br>சிறுப்பிட்டி தெற்கு,<br>நீர்வேலி.

---

## "அரும்பணி ஆற்றும் ஆசிரியர்"



"தூய ஆவியானவரின் ஆலயமாக மனிதனின் உடல் திகழுகிறது" என்னும் கத்தோலிக்க வேதத்தின் போதனையும் மனிதனின் மாண்பையே பறைசாற்றுகின்றது 'மனிதன் என்பவன் தெய்வமாகலாம்' என்ற கவியரசு கண்ணதாசனின் கவிதை வரியும் மேலே காணப்படும் மெய்யியல் கருத்தையே அணி செய்கின்றது.

ஆசிரியர் திரு. எஸ். எவ். சேவியர் நமது மதிப்பிற்குரிய ஒரு மாமனிதர் புகழ் பூத்த புனித பத்திரிசியார் கல்லூரியில் 25 ஆண்டுகளாகப் பணி புரிந்துவரும் இவர், இளைஞர்களின் வாழ்த்துக்கு எல்லாவகையிலும் தகுதியுடையவர்

ஆசிரியர் பணி அற்புதமானது. 'எழுத்து அறிவித்தவன் இறைவன்' என்னும் பொன் மொழியும் இதனையே புகல்கிறது. அன்னை, தந்தைக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுபவர் ஆசிரியர் அன்றோ.

ஆசிரிய பணியில் கால் நூற்றாண்டைக் கண்டுவிட்ட திரு. எஸ். எவ். சேவியர் கணிதம், விஞ்ஞானம், பொறிமுறை வரைதல் போன்ற பாடங்களை சீரிய முறையில் மாணவச் செல்வங்களுக்கு கற்பிக்கும் திறமை மிக்கவர்.

விளையாட்டுத் துறையில். இவர் புரிந்த சாதனைகள் வியந்து போற்றப்பட வேண்டியவை பதினொரு ஆண்டுகள் பத்திரிசியார் கல்லூரியில் துடுப்பாட்டத்தின் பொறுப்பாளராகத் திகழ்ந்த ஆசிரியர் அவர்கள், அக்கால கட்டத்தில் வடக்கிலுள்ள பாடசாலைகளிடையே நடைபெற்ற போட்டிகளில் மட்டுமல்ல, தெற்கிலும் சூடிய வெற்றி சாதாரணமானதல்ல, அது ஒரு சரித்திரம்!

உதைபந்தாட்டத்திற்கும் சிலவருடங்கள் உயிர் ஊட்டியுள்ளார். இவரின் 'வெள்ளி விழா' அண்மையில் மேற்படி கல்லூரியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது குறிப்பிடத்தக்கது.

— "வாகரைவ :ணன்',

---

## வெள்ளிச்சிந்தனை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களான சோதிடம் முதலியனவும் சைவ மக்களுக்கு உரிய நூல்களேயாகும் ,

சைவசமயப் பிரமாண நூல்கள் எல்லாவற்றின் சாரங்களையும் கிரகித்து நம்மவர்கள் அனைவருக்கும் பயன்படத்தக்கதான நூல்கள் பல இயற்றியவர் ஆறுமுக நாவலர் அவர்கள்.

நாவலர் இயற்றி உதவிய நூல்களுள் 1-ம், 2-ம், சைவ வினாவிடை 2-ம், 4-ம், பால பாடங்கள் போன்றன ஒவ்வொருசைவசமயியும் அறிந்து அநுட்டிக்கவேண்டிய சைவ சமயக் கருத்துக்களையும் விளக்கங்களையும் உணர்ந்துகின்றன. இவற்றைப் படித்துச் சிந்திக்கும் ஒருவர் இவற்றின் உதவியாலேயே ஒருவன் தொடர்ந்து கற்கவேண்டிய நூல்களையும் விடயங்களையும் அறிந்து கொள்ள முடியும் சைவசமயம் பற்றி விளக்கமளிக்கும் பிரபல நூல்கள் சில கருத்துவேறுபடுவனபோலிருக்கும். மாறுபடும்நூல்கள் ஒவ்வொருதுறை பற்றியோ ஒவ்வொரு தகுதியினர் தேவை குறித்தோ இந்நூல்கள் மாறுபடுகின்றன என்று விளங்கிக்கொள்ள வேண்டுமேயன்றி ஒரு நூலை விட்டு ஒருநூலை ஏற்றுக் கொள்வதாயிருக்கக்கூடாது. பலநூல்களைப் புறக்கணிக்கலாகாது. எப்படி ஒரு யானைக்குச் சுளகு போன்ற காது இருப்பது உரல்போன்ற கால் இருப்பதற்கு விரோதமில்லையோ அப்படியே பலதரப்பட்ட தகுதியினருக்கு பலதரப்பட்ட காலத்திலும் பலதரப்பட்ட இடத்திலும் தோன்றிய நம் சமய உண்மைகள் தனித்துவமானவையாயும் விரோத மற்றனவாயும் இருக்கும்.

தெய்வீகப்பேறு நமக்குக் கிடைப்பதற்கு உத்தரவாதமான அநுபவஞானிகளைச் சான்றாக உடையநாம் சமயத்தின் கோட்பாடுகளைத் தழுவி வழிபடுவதும் வாழ்வதுமே சைவமாஞ்சமயம் சாரும் (அரிய) ஊழ் பெற்றதன் பயனாகும்.

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுநம் சுந்தரனுஞ்,<br>சிற்கோல வாதவூர்த் தேசிகனும் முற்கோலி<br>வந்திலரேல்நீ (று) எங்கே மாமறைநூல் தான் எங்கே,<br>எந்தைபிரான்ஐந்தெழுத் (து) எங்கே<br>— சிவானந்தமாலை

**அருளாளன்**

## இந்திய நிவாரணப் பொருள்கள் தமிழ்ப் போராளிகளுக்கு வழங்கப்படவில்லை- இந்தியத் தூதரகம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியக் கப்பல்கள் மூலம் அனுப்பி வரும் நிவாரணப் பொருள்கள் தமிழ்ப் போராளிகளுக்கு வழங்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

யாழ்ப்பாண மக்களுக்கு இந்தியா அனுப்பிய நிவாரணப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்படாமல் போராளிகளுக்கு வழங்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை மறுத்துரைக்கும் போதே இந்தியத் தூதரக அதிகாரி மேற்கண்டவாறு கூறினர்.

இந்திய நிவாரணப் பொருள்கள் யாழ். அரசாங்க அதிபரின் தலைமையில் இலங்கை அதிகாரிகளினலேயே வழங்கப்படுகிறது என்றும் அந்த தூதரக அதிகாரி தெரிவித்தார்.

## அறிவுறுத்தல் மாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஜூலை மாதம் [illegible].5ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சையின்போது பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களாக நிரந்தர நோக்குநர்களாக மேலதிக மேற்பார்வையாளர்களாக, இணைப்பதிகாரிகளாக உதவி இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டவர்களுக்கான அறிவுறுத்தல் மாநாடு எதிர்வரும் 20ம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஊ)

## இன்றைய பலன்

திகதி- 01- 17-7-87)
மாதம்- ஆடி
கிழமை- வெள்ளி
திதி: ஸப்தமி
நட்சத்திரம்: ரேவதி

மேடம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம், தொடர்புகள் பெருகும், தள்ளிவைத்த மக்கள் உம்மை அள்ளி அணைத்திடுவர்.

இடபம்: நிம்மதிபறக்கும், பொருள் தவறக்கூடும். அதிக சிந்தனையைத் தவிர்க்கவும், நெடும்பயணம் வேண்டாம்.

மிதுனம்; தகுதியில் முன்னேற்றமுண்டு, தரமான வாழ்வும் கிட்டும், எதிரிகளும் பணிவர்.

கடகம்: பூமியால் லாபமுண்டு, புதியதொழிலில் வெற்றியுண்டு.

சிங்கம்: எதிலும் சோர்வு தென்படும், விபரீதங்களும் விளையலாம், மனதிலும் கவலைகள் அதிகரிக்கும்.

கன்னி: மெத்தவும்பொருள் சேரும், தித்திக்கும் செய்திக்கிடமுண்டு, தேனன வாழ்வும் உண்டாம்.

துலாம்: எதிர்பாராத மூலையிலிருந்து ஆபத்துக்கள் விளையலாம், வாதரோகம் தென்படப்பார்க்கும், சிந்தனைக்கிடமளியாதிருக்கவும்.

விருச்சிகம்: பிறபொருள்வரவுமுண்டு, பெரியோர் ஆதரவுமுண்டு பொன்னன வாழ்வுக்கும் வழிகோலப்படலாம்.

தனுசு: தங்கக் குணம் மேலிடும், தக்கமதிப்பும் கிடைக்கும். தொழில் முன்னேற்றமுண்டு, சுபதினம்.

மகரம்: வணிகத்துறையில் முன்னேற்றமுண்டு, எதிலும், உற்சாகம் தென்படும், பெரியோர் ஆதரவுமுண்டாம்.

கும்பம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். தூக்கம் விழிகளைத் தழுவமறக்கும், உறவினர் மத்தியில் மோதல்களும் ஏற்படலாம்.

மீனம்: மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகுவீர்கள், அமைதிக்குப பங்கம் விளையும், எதிலும்மனத்திடம்வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அகதிகளுக்கு உதவுமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமராட்சி, வலிகாமம் வடக்கு கிழக்குப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினல் பாதிக்கப்பட்டு நிர்க்கதியான அகதிகளுக்கு உடைமற்றும் பொருள்களை சேகரிக்கும் பணியில் யாழ் பல்கலைக்கழக புனர்வாழ்வு அமையம் ஈடுபட்டுள்ளது தமது பணிக்கு தாராளமாக உதவி ஆதரவளிக்குமாறு அகதிகள் புனர்வாழ்வு அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கடமைக்குச் சென்ற 10 தமிழ் அரச ஊழியருக்கு அநுராதபுரத்தில் வீடுவழங்க மறுப்பு

[கொழும்புத்துறை நிருபர்]

அநுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். பிரதேச மலேரியா ஆய்வுகூடத்தைச் சேர்ந்த பத்துத்தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் அநுராதபுரத்தில் தங்கியிருந்து கடமையாற்ற முடியாத நிலையில் யாழ்ப்பாணம்திரும்பியுள்ளனர்.

இவ்வுத்தியோகத்தர்கள் அநுராதபுரத்தில் தங்குவதற்கு அங்குள்ளவர்கள் தமது வீடுகளில் இடம்கொடுக்க மறுத்துவிட்டனராம். முஸ்லிம் மக்கள்கூடவீடுகளில் தங்குவதற்கு இடம்கொடுக்கவில்லையாம் இதனல் இந்தப் பத்து உத்தியோகத்தர்களும் ஒரு தினங்களாக வவனியாவிலிருந்து அநுராதபுரம் அலுவலகத்துக்குச் சென்றுவந்தனர். பின்னர் தங்குவதற்கு இடமில்லாத நிலையில் வீடு திரும்பிவிட்டனர்.

பிரஸ்தாப உத்தியோகத்தர்கள் தமக்கு அநுராதபுரத்திலிருந்து வேறிடத்துக்கு மாற்றம் தரும்படி சுகாதார அமைச்சுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

"குறையாத வலிக்கும் நான் நாடும் விரைவான நிவாரணம் டிஸ்பிரின்"



"வலிகள், நோவுகள், தடிமல், காய்ச்சல் என்று வந்து விட்டால் நான் தயங்குவதேயில்லை, டிஸ்பிரின் இருக்க எனக்கேது சங்கடம்? சுலபமாகவும் துரிதமாகவும் நிவாரணம் தருவதில் அதற்கு நிகரில்லை என்பது என் நீண்ட கால அனுபவம். வேண்டுமானல், நான் கற்றறிந்த பாடமும் அது தான் என்று வைத்துக் கொள்ளுங்களேன்!"

செல்வி யமுன தட்சணமூர்த்தி பட்டதாரி ஆசிரியை.

உலகெங்கும இலட்சக்கணக்கான மக்கள், வலிகள், காய்ச்சலிலிருந்து துரித நிவாரணம்பெற, நாற்பது வருடங்களுக்கும் மேலாக, டிஸ்பிரினை நம்பி வந்திருக்கிறர்கள். துரிதமான, நிச்சயமான நிவாரணத்துக்கு டாக்டர்கள் அதனைச் சிபாரிசு செய்கிறர்கள், ஏனெனில் டிஸ்பிரின் கரையக்கூடியது.

நம்பிக்கையுடன் பாவியுங்கள் டிஸ்பிரின்

டிஸ்பிரின்
துரித நிவாரணத்துக்கு
உலகெங்கும் நம்பப்படுவது




ஒரு றெக்கிட் அன் கோல்மன் தயாரிப்பு
விலை: ஒரு மாத்திரை 50 சதம் வளர்ந்தவர்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

QUEST 1210

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 17-7-87

# பிரதமர் பிரேமதாஸாவுக்கு எதிராக லண்டனில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

லண்டனில் பெருந் தொகையான தமிழர்கள் பிரதமர் பிரேமதாஸாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். லண்டன் பிறைட்டன் மாநாட்டு மண்டப வாசலிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கட்டடக் கலைஞர்கள் சர்வதேச யூனியனின் 16 வது மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பிரதமர் பிறைட்டன் மாநாட்டு மண்டபத்திற்குச் சென்றிருந்தார். அங்கு அவர் ஆரம்ப உரையை ஆற்றிவிட்டு மாநாட்டு மண்டபத்திற்கு வெளியே வரும் போது இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் எதிரான கோஷங்களை கோஷித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாநாடு நடைபெற்ற பிறைட்டன் மாநாட்டு மண்டபத்திற்கு 100 யார் தொலைவிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியவர்கள் தமிழீழக் கோரிக்கை ஆதரவாளர்களெனத் தெரிய வருகிறது.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியிடங்களிலிருந்து பஸ்களில் ஏற்றி வரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்த்து மற்றொரு ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியவர்கள் இலங்கையிலுள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

---

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## மாணவிகளின் அனுமதி அட்டைகள்

(நமது நிருபர்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 'உயர்தர) வகுப்பு மாணவிகளின் க.பொ த. (உயர்தர) பரீட்சைக்குரிய அனுமதிஅட்டைகள் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படும்.

மேற்படி கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவிகள் தமக்குரிய அனுமதி அட்டைகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணி தொடக்கம் யாழ். சாதனை பாடசாலையில் [கல்விக் கந்தோருக் கருகாமையில்] பெற்றுக் கொள்ளலாம் எனஅதிபர் திருமதி பி. இராஜேந்திர சிங்கம் அறிவித்துள்ளார்.

---

இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு

## இந்திய பொருள்களை களஞ்சியப்படுத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்.

இந்திய நிவாரணப்பொருள்களை நிலாவரையில் உள்ள ஒருகட்டிடத்திலும் உடுவிலில் உள்ள மற்றொரு கட்டத்திலும் களஞ்சியப்படுத்தி பாதுகாப்பாக வைப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

நிலாவரையில் கனடிய அரசின் உதவியுடன் நிர்மானிக்கப்பட்ட இந்தக்கட்டிடத்தையும், உடுவிலில், சுன்னுகப் ப நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான களஞ்சியக்கட்டிடத்தையும், யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணமும் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டனர். இவ்விரு கட்டிடங்களும் தற்காலிகமான களஞ்சியங்களாக பாவிக்கப்படவிருக்கின்றன.

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பொறுப்பில்விடப்படவிருக்கும் இக்களஞ்சியக் கட்டிடங்ககளில் இந்திய நிவாரணப்பொருள்களை சுன்னுகத்தில் வைப்பதில் இருந்துவந்த இடநெருக்கடி குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. [வா]

---

## ஜூலை 25ல் லண்டனில் கரிநாள் அனுஷ்டிப்பு

லண்டன், ஜூலை 16

இலங்கையில் 83 ஜூலையில் இடம்பெற்ற இனக் கலவரத்தை நினைவு கூறு முகமாக இம்மாதம் 25ம் திகதி லண்டனில் உள்ள 'ஈழ பிரசார இயக்க ஒன்றியம் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

அன்றைய தினத்தைக் கரி நாளாக அனுஷ்டிப்பதுடன் லண்டன் ஹைபார்க் மைதானத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தவும்' ஈழ பிரசார இயக்க ஒன்றியம்' முடிவு செய்துள்ளது. (மா)

---

## வவனியா பௌத்த குரு இன்று சென்னை செல்வார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்த வவனியா பௌத்த விகாரை பிரதமகுரு சியாம்பலகெஸ்வ விமலசார தேரோ தலைமையிலான சமாதானக்குழு இன்று சென்னை செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின்போது இவர்கள் தமிழ்போராளிகள் குழுக்களுடனும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடனும் இனப்பிரச்னை தொடர்பாக பேச்சுக்கள் நடத்துவார்கள் தமிழக அமைச்சர்களை சந்திக்கலாமெனவும் தெரியவந்துள்ளது.

இந்தியா செல்லும் இக்குழுவில் சர்வோதய இயக்கமும், வவனியாவில் செயற்படும் சமாதானகுழு உறுப்பினர்களும் அடங்குவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பயிர்களுக்கு

## நீரிறைக்க சென்றவர்கள் இராணுவத்தால் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டு குள் இருந்து வரும் மாவிட்டபுரம் தச்சன்காட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் பயிர்களுக்கு நீர் இறைக்கச் சென்ற இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த குழந்தைவடிவேலு, மாசிலாமணி என்றஇருவருமே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள தச்சன்காட்டுப் பகுதியில் கடந்த யூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தரை மட்டமாக்கப்பட்ட வீட்டில் உள்ள தென்னை, எலுமிச்சை போன்ற பயிர்களுக்கு தண்ணீர் இறைப்பதற்கு நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு குழந்தைவடிவேலும், மாசிலாமணியும் சென்றபோது அங்குபதுங்கியிருந்த ராணுவத்தினர் அவர்களை கைதுசெய்து மாவிட்டபுரம் பகுதியில் இராணுவத்தினர் தங்கியிருந்த வீடொன்றில் மாலை 4மணி வரை வைத்திருந்தனராம்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இந்த இருவரும் இறந்து கிடந்த நாய்களுக்கு மிக அருகாமையில் இருத்தி வைக்கப்பட்டதுடன். இனிமேல் இந்தப்பக்கம் வரக் கூடாது என்று எச்சரிக்கப் பட்ட பின்னரே விடுவிக்கப் பட்டனர் எனத் தெரியவருகிறது. (வா)

---

## அரச அறிவிப்பு

[கொழும்பு]

தற்பொழுது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க வைத்தியர்கள் தத்தமது கடமைகளிலிருந்து விலகிக்கொண்டவர்களாக கணிக்கப்படுவார்கள் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இநத வேலைநீக்கத்திற்கான சட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. [ரா]

---

## மருந்துவகையில் ஒருபகுதியை பண்டத்தரிப்புக்கும் அனுப்புக

### பிரஜைகள் குழு கோரிக்கை

[பண்டத்தரிப்பு நிருபர்]

இந்திய அரசு யாழ் குடா நாடு மக்களுக்கென வழங்கிய மருந்துவகைகளில் ஒரு பகுதியை பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கும் வழங்குமாறு பண்டத்தரிப்பு பிரஜைகள் குழு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வலிவடக்கு பிரிவிலிருந்தும் வடமராட்சி பகுதியிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பகுதிகளில் தஞ்சமடைந்திருப்பதால் இந்த வைத்தியசாலைக்கும் இந்தியா அன்பளிப்புசெய்துள்ள மருந்து வகைகளில் ஒரு பகுதியை வழங்கவேண்டும் என்று பண்டத்தரிப்பு பிரஜைகள் குழுவின் தலைவர் திரு. ஏ வி. துரையப்பா யாழ். செஞ்சிலுவைச் சங்க தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் நோயாளர் வருகை தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் வார்ட்டுகளில் பெரும்தொகையான நோயாளர்கள் தங்கி சிகிச்சைபெற்று வருவதாகவும் இக்கடிதத்தில் திரு. துரையப்பா சுட்டிக் காட்டியுள்ளார்.

---

## கோவையில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களை எழுப்பிக்கொண்டு இவர்கள் ஊர்வலம் சென்றனர். இலங்கைஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கொடும்பாவிஒன்றும் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது.

---

## அரச அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,வெள்ளி

வடமராட்சிப் பகுதியில் இடம் பெயர்ந்து தென்மராட்சியில் தங்கியுள்ள அகதிகளை யாழ் அரச அதிபர் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

தென்மராட்சியில் தங்கியுள்ள இந்த அகதிகளுக்கு இந்திய நிவாரணப் பொருள் விநியோகம் செய்யப்பட்டுவரும் அதேவேளை அரச நிவாரணப் பொருள் விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அரச நிவாரணப் பொருள்கள் வடமராட்சியில் இருந்து வெளியேறி தென்மராட்சியிலும் மற்றும் பகுதிகளிலும் தங்கியுள்ள சகல அகதிகளுக்கும் வழங்கப்படவுள்ளதென யாழ். செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வா)

---

## இந்திய

[1ம் பக்கத் தெடர்ச்சி]

ஏற்படுத்தும் தாமதத்தையடுத்தே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது இதன்படி இம் மாதம் 20ம் திகதிவரை இங்கு வர அனுமதிக்கப்பட்டிருந்த கப்பல்கள் மேலும் அடுத்த மாதம் 4ம் திகதி வரை வரவுள்ளன.

இதற்கிடையில் 1000 தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு'எம் பி நிக்கோரேட்' சரக்குக் கப்பல் நேற்றுக் காலை சென்னையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுள்ளது. (சி)

---

## மரண அறிவித்தல்

### ஏ ரி. கந்தையா

காரைநகர் அலென் வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற தலைமைஆசிரியர் அருணசலம் தோமஸ் கந்தையா காலமானர் இவர் ஞானம்மாவின் அன்புக்கணவரும், சுசீலா, சகுந்தலா, வசந்தா, கருணைரஞ்சன், ஞானரஞ்சன் ஆகியோரின் தந்தையாரும், பத்மசீலன், மகேஸ்வரன், தேவசகாயம், அரியவதனு ஆகியோரின் மாமனருமாவார். நல்லடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு காரைநகரில் இடம்பெறும்.

(சி 9880) தகவல்: என். பத்மசீலன்

### கந்தையா கத்தவனம்

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சந்தையா கந்தவனம் (மறுநாமம் கணபதிப்பிள்ளை) 07-07-87 அன்று அகால மரணமானர். அன்னர் வள்ளிநாச்சியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரி, சுப்பிரமணியம் (பொறியியற்பீட துணை ஆசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்), உலகநாயகி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலனின் (கணக்காளர்) மாமனும் ஆவார். இவ்வறிவித்தலை இடம்பெயர்ந்திருக்கும் உற்ருரும், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் க. சுப்பிரமணியம்

[சி-9868]

---

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு சின்னம்மா

திருமதி சின்னம்மா காலமானர். இவர் காலஞ்சென்ற நயினதீவு முருகேசு கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், காசிலிங்கம், காலஞ்சென்ற குமாரவேலு, புவனசுந்தரம், செல்வத்துரை, சிவக்கொழுந்து தையலம்மை, விசாலாட்சி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 17-07-87 (இன்று) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

இங்ஙனம்
தகவல்: புவனசுந்தரம்
(சி-9881)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.